DEPOSITION OF WITNESS

(In the Court of the Subordinate Judge, Sankarankovil )
O.S.No. 98/2019
****

| | |
|---|---|
| Deposition of Witness for | : DW1 |
| Name | : சண்முகநாதன் |
| Father`s Name | : |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 24.10.2025 |

Solemnly affirmed by Thiru.P.Mahindra Varma, Subordinate Judge, Sankarankovil in accordance with section 6(2) of Act No.44 of 1969.

**முதல் விசாரணை**

I do solemnly affirm that what I shall state that shall be truth, the whole truth and nothing but the truth.

நான் திருவேங்கடம் மண்டல துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருகிறேன். நான் 3ம்பிரதிவாதி தரப்பு வட்டாட்சியருக்காக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பு முதல் விசாரணையாக நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அதில் உள்ள சங்கதிகள் நான் சொல்லி அது கணிணிமயமாக்கப்பட்டது. முதல் விசாரணை சாட்சியத்தில் உள்ள சங்கதிகளை படித்து பார்த்து கையெழுத்திட்டுள்ளேன். பிராது தபசில் சொத்து சம்மந்தமான UDR – A Register நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். பிராது தபசில் சொத்து சம்பந்தமான FMB – Map நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும். பிராது தபசில் சொத்து சம்பந்தமான 10(1) அடங்கல் நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். பிராது தபசில் சொத்து சம்பந்தமான கணினி வழி பட்டா நகல் பி.வா.சா.ஆ.4 ஆகும். வட்டாட்சியரால் அளிக்கப்பட்ட அதிகார கடிதம் பி.வா.சா.ஆ.5 ஆகும்.